[1979 மார்ச் 15

சென்னையில் ஏற்படுத்தலாம் என கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. அனேகமாக விரைவில் இதன் மீது முடிவு எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் ; இப்போது ட்ரிபூனல் அமைக்கப்பட்ட பின்னால் பாதிக்கப்பட்டவர்கள் இதில் முறையிட்டுக்கொள்ள முடியுமா? அப்படி ட்ரிபூனலில் முறையிட்டுக் கொள்ளும்போது, முன்னாலேயே வேலையிழந்தவர்கள் வழக்குப் போட்டால், முன்னாலிருந்தே 'ரெட்ராஸ்பெக்டீவ் எபக்ட்' கொடுத்து வேலை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

தேயிலைத் தோட்டப்பகுதிகளில் தெரு விளக்குகள்.

வினா எண். 409 திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேயிலைத் தோட்டங்களில் உள்ள தெருக்களுக்கு விளக்குகள் போட தேயிலைத் தோட்ட அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம். தேயிலை மற்றும் மலைத் தோட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கும், தெருக்களுக்கும் தேவையான மின்விளக்கு வசதிகள் செய்து தருவது குறித்து சம்பந்தப் பட்ட தோட்ட உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படுகின்றது.

திரு. கே. உச்சி ; தலைவர் அவர்களே, இப்படி போடப் பட்ட சில திட்டங்களில் போட்ட தெரு விளக்குகளும் வீடுகளில் உள்ள விளக்குகளும் எரியாமல் அடிக்கடி ரிப்பேர் ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் ரிப்பேர் செய்து அவைகள் நிரந்தரமாக எரிவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளிலே இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தால், அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களிடம் சொல்லி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மானிடரிங் செல் என்று ஒன்றிருக்கிறது. அவர்தான் அந்தக் குழுவின் தலைவர்.

1979 மார்ச் 15]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தத் தேயிலைத் தோட்ட அதிபர்கள் இதற்கு சம்மதித்து இருக்கிறார்கள்? எந்தெந்தத் தோட்டங்களில் இது அமுல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதோடு, மாஞ்சோலை என்ற தோட்டப் பகுதியிலே லைட் எரிவதில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கு விடை—178 தேயிலைத் தோட்டங்களில் தெருவிளக்குகள் அமைக்கப்பட வேண்டும். 82 தோட்டங்களிலே பொருத்தியாகி விட்டது. மீதமுள்ள 96 தோட்டங்களில் தெரு விளக்குகள் பொருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தேயிலைத் தோட்டங்களைத் தவிர, மற்றத் தோட்டங்கள் 188 இருக்கின்றன. இவற்றில் 25 தோட்டங்களில் தெரு விளக்குகள் போடப்பட்டிருக்கின்றது. மீதமுள்ள 163 தோட்டங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்பட இருக்கிறது. இரண்டாவது கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லை.

நிறுவனங்களின் தமிழ்ப் பெயர்ப் பலகைகள்

* வினா எண். 410— திரு. இரா. முத்தையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை நகரிலும், பிற நகரங்களிலும் உள்ள நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளை தூய தமிழில் இருப்பதற்குரிய ஆணை ஏதேனும் அரசின் சார்பில் அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 1977ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவகங்களில் தமிழில் பெயர் பலகைகள் வைக்கப்பட வேண்டுமென்றும், தமிழைத் தவிர வேறு எந்த மொழிகளில் பெயர் பலகைகள் எழுதப்பட்டாலும் அம்மொழிகளில் எழுதப்பட்ட வாசகங்கள் தமிழ் வாசகங்களுக்கு கீழே தான் இருக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. இரா. முத்தையா: பேரவைத் தலைவர் அவர்களே, பெயர்ப் பலகைகள் தமிழில்தான் இருக்கவேண்டும் என்ற உத்தரவிட்டதற்கு அரசுக்கு நன்றி. ஆனால், சென்னை போன்ற இடங்களில் இன்னும் பல்வேறு பெயர்ப் பலகைகள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. குறிப்பாக, அண்ணா சாலை போன்ற இடங்களில் கிராமப் பகுதியிலே இருந்து மக்கள்